**11.6.2026**

பெயர் - சந்தோஷ்குமார்

**O.S. No.100/2018 (D.W - 1)**

விசாரணை தொடங்கும் நேரம்:- 11.55 AM

விசாணை முடியும் நேரம் :- 12.55 PM

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை **:-**</u>

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தினை படித்துபார்த்து தான் கையொப்பம் செய்தேனா என்றால் ஆமாம். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வாதியின் பெயர் பாப்பாத்தி அல்ல என்றும் அவரது பெயர் சமுருனிசா என்று கூறியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். அவரது பெயர் சமுருனிசா என்பது எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் வழக்குறையை படித்து பார்த்து தெரிந்து கொண்டேன். அவர் பெயர் சமுருனிசா என்பதை காட்டுவதற்கு எதேனும் ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது வழக்கறிஞர் கூறிதான் வாதியின் பெயர் சமுருனிசா என்பதை தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான். வாதியின் உண்மையான பெயர் பாப்பாத்தி என்றும் வழக்கிற்காக எனது வழக்கறஞர் அவரது பெயரினை சமுருனிசா என்று குறிப்பிட்டுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. அவர் இஸ்லாமியர் என்பதால் அவரது பெயர் சமுருனிசா தான். என் அப்பா இறந்த பின்னர் நாங்கள் 2 மகன்களும் பாப்பாத்தியும் சென்று வட்டாட்சியரிடம் விண்ணப்பித்து அவர் விசாரணை செய்து அதன் பின்னரே எங்களுக்கு வாரிசான்றிதழை வழங்கினார் என்று

சொன்னால் சரியல்ல. என் அப்பாவிற்கு 2 மனைவிகள் இருப்பதாக தெரியவருவதால் நீதிமன்றத்தை அனுகி வாரிசு சான்றிதழை பெற்றுக்கொள்ளும்படி வட்டாட்சியர் தெரிவித்தார். அதன்பின்னர் எங்களுக்கு தெரியாமல் பாப்பாத்தி வாரிசுசான்றிதழ் பெற்றுள்ளார். வட்டாட்சியர் தெரிவித்த 2 மனைவிகளில் ஒரு மனைவி இறந்துவிட்டார் என்றும் பாப்பாத்தி மட்டும் தான் உயிருடன் இருந்தார் என்றும் சொன்னால் சரிதான். ஆனால் பாப்பாத்தி என் அப்பாவின் மனைவி அல்ல. வட்டாட்சியர் முறையான விசாணைக்கு பின்னரே வாரிசுசான்றிதழை வழங்கியுள்ளார் என்றும் நான் வழக்கிற்காக அதை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் அப்பா இறந்தது 19.2.2016 என்று சொன்னால் சரிதான். 6.9.2016 அன்று வாரிசுசான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் எனக்கு தெரியாது. இவ்வழக்கில் சம்மன் சார்வு செய்யப்பட்டு வழக்கறிஞர் மூலம் நீதிமன்றத்தில் ஆஜரானேன் என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கினை பாப்பாத்தி தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியும் என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கு நிலுவையில் உள்ள விவரத்தை தெரிந்துகொண்டே உதகையில் உள்ள 3 சொத்தினையும் பெருந்துறையில் உள்ள 2 சொத்தினையும் விற்பனை செய்துள்ளோம் என்று சொன்னால் என் அப்பா இருக்கும் போதே அந்த விற்பனைக்கான பணத்தினை பெற்றுகொண்டார் அதனால் என்ன செய்வதென்று தெரியாமல் விற்பனை செய்துவிட்டோம். என் அப்பா இறந்து 2 வருடங்களுக்கு பின்னிட்டு பாப்பாத்தியின் பெயர் இல்லாமல் எங்கள்

பெயரில் ஒரு வாரிசு சான்றிதழை பெற்றுள்ளோம் என்று சொன்னால் சரிதான். 2 வதாக வாங்கியதாக வாரிசான்றிதழின் அடிப்படையில்தான் மேற்படி சொத்துக்களை விற்பனை செய்துள்ளோம் என்று சொன்னால் சரிதான். நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கும் போது பணம் கொடுத்து பொய்யான ஒரு வாரிசுசான்றிதழை பெற்று வாதியை ஏமாற்றும் நோக்கத்தில் மேற்படி சொத்துககளை விற்பனை செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. வாரிசுசான்றிதழக்கான வழக்கு கூடலூர் நீதிமன்றத்தில் நடைபெற்றுவருகிறது. நாங்கள் பொய்யாக ஒரு வாரிசு சான்றிதழை பெற்றுள்ளோம் என்று பாப்பாத்தி எனக்கெதிராகவும் வட்டாட்சியருக்கு எதிராகவும் ஒரு வழக்கினை அசல் தாவா எண்.45/2021 என்ற எண்ணில் கூடலூர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அது நிலுவையில் இருந்து வருகிறது என்று சொன்னால் சரிதான். மேற்படி வழக்கில் நான் ஆஜராகவில்லை என்றும் தோன்றா தரப்பினராக இருந்து வருகிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. ஆனால் நான் பெட்டி ஏறி சாட்சியளித்தேனா என்றால் இன்னும் ஏறவில்லை. நான் 2 முறை இவ்வழக்கில் தோன்றா தரப்பினராக இருந்து வந்தேன் என்று சொன்னால் எனக்கு அடிபட்டுவிட்டதால் அப்போது என்னால் வரஇயலவில்லை. எனக்கு எப்போது விபத்து ஏற்பட்டது என்றால் கடந்த 5 வருடங்களுக்கு முன்பாக ஏற்பட்டது. வழக்கு தாக்கல் செய்தவருடம் 2018 என்றும் நான் 2018, 2019 ம் வருடம் ஆஜராகமல் இருந்துவிட்டு தற்போது வழக்கிற்காக பொய்யாக சாட்சியம்அறிக்கிறேன் என்றால் சரியல்ல. என்

அப்பா இறக்கும் போது ஓய்வு பெற்ற வனத்துறை ரேஞ்சர் என்று சொன்னால் சரிதான். அவர் எவ்வாறு இறந்தார் என்றால் அவருக்கு தலையில் நரம்பு வெடித்து இறந்துவிட்டார். என் அப்பா இறப்பதற்கு முன்பாக நான் பாவானிசாகரில் தான் இருந்து வந்தேன் என்று சொன்னால் அங்கும் இருந்தேன் பெரும்பான்மையான சமயத்தில் என் அப்பாவுடன் இருந்தேன். கூடலூரில் உள்ள என் அப்பாவின் சொந்த வீடு என்று சொன்னால் சரியல்ல. அது என் அம்மா பெயரில் உள்ள வீடு ஆகும். அந்த வீட்டில் தான் என் அப்பா வாழ்ந்து வந்தார் என்று சொன்னால் சரிதான். என் அம்மாவின் பெயரில் இருந்த சொத்துக்களை என் அம்மா இறந்த பின்னர் என் அப்பாவும் தம்பியும் விற்பனை செய்து தான் தாவா சொத்துக்களை என் அப்பா வாங்கியதாக வழக்கில் நான் கூறியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். என் அம்மா எப்போது இறந்தார் என்றால் 27.11.2006 அன்று இறந்தார். நான் வழக்கிற்காக மேற்படி சங்கதியை பொய்யாக கூறுகிறேன் என்றும் என் அம்மா 2002 ம் வருடத்திலேயே இறந்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. 2005 வருடம் என் அம்மாவின் சொத்துக்களை என் அப்பாவும் தம்பியும் விற்பனை செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். என் அம்மாவின் சொத்துக்களை விற்பனை செய்தோம் என்பதை காட்டுவதற்கான ஆவணங்களை இவ்வழக்கில்தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த விவரங்கள் என் அப்பாவிற்கு தான் தெரியும். நான் வழக்கிற்காக மேற்படி சங்கதியை பொய்யாக கூறுகிறேன் என்றும் என் அம்மா பெயரில் எந்த சொத்துக்களும்

இல்லை என்றும் அவ்வாறு இருந்திருந்தால் ஆவணங்களை தாக்கல் செய்திருப்பேன் என்றும் சொன்னால் சரியல்ல. என் அம்மா இறக்கும் போது எவ்வளவு நகை வைத்திருந்தார் என்றால் 40, 50 பவுன் நகை வைத்திருந்தார். அதை விற்பனை செய்தோம் என்பதை காட்டுவதற்கு ஏதேனும் ஆவணம் உள்ளதா என்றால் என் அப்பாதான் விற்பனை செய்தார். அதனால் என்னிடம் ஆவணம் இல்லை. என் அப்பா பணி ஓய்விற்கு முன்னர் ரூ.50,000/- சம்பளமாக பெற்றுவந்திருப்பாரா என்றால் பெற்று வந்திருப்பார். என் அப்பாவிற்கு எந்த வருமானமும் இல்லை என்று பிரமாண வாக்குமூலத்தில் தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பாப்பாத்தி முதலில் ஸ்டான்லி என்பவரை திருமணம் செய்திருந்தார் என்று சொன்னால் சரிதான். அவர் கிருஸ்துவ மதப்படி திருமணம் செய்திருந்தார் என்று சொன்னால் சரிதான். நான் எனது முதல் விசாரணை பிரமாண பத்திரிக்கையில் பாப்பாத்தி என் அப்பாவுடன் இருந்ததாக கூறியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பாப்பாத்தி தான் என் அப்பாவை 10 வருடங்களாக பார்த்துகொண்டார் என்றும் நான் பவானிசாகரில் என் மனைவி குழந்தைகளுடன் வாழ்ந்துவந்தேன் என்றும் என் அப்பாவை பராமரிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. வாதி ஜோசப் ஸ்டான்லியியை நீதிமன்றம் மூலம் விவாகரத்து செய்தபின்னர் தான் என் அப்பாவை திருணம் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. வாதியும் என் அப்பாவும் திருமணம் செய்துகொண்டதை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் எனக்கு

தெரியாது. 2006 ம் வருடத்திலேயே வாதி என் அப்பாவை திருமணம் செய்துகெண்டார் என்றும் 1/319 OVH சாலையில் உள்ள வீட்டில் 10 வருடங்களாக கணவன் மனைவியாக வாழ்ந்துவந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. என் அப்பா நோயுற்று இருந்த போது வாதி தான் சுல்தான் பத்தேரி மருத்துவமனைக்கு அழைத்து சென்றார் என்றும் என் அப்பா இறந்த பின்னர் வீட்டிற்கு எடுத்து வந்து இறுதி சடங்குகளை செய்தார் என்றும் சொன்னால் சரியல்ல. என் தம்பியின் மனைவி மற்றும் என் மனைவி தான் என் அப்பாவை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். இறந்த பின்னர் எங்கள் வீட்டிற்கு எடுத்துவந்த எங்கள் வீட்டிலேயே அடக்கம் செய்தோம். மேற்படி சங்கதியை நான் பொய்யாக கூறுகிறேன் என்றும் 3 வது நான் பூஜைக்கு பின்னர் வாதியை நாங்கள் துரத்திவிட்டோம் என்றும் சொன்னால் சரியல்ல. என் அப்பா இருந்த வீட்டில் 3 பகுதிகள் உள்ளது என்றும் அதில் ஒரு பகுதியில் என் அப்பாவும், நானும் என் தம்பியும் தலா ஒரு பகுதியிலும் வாழ்ந்துவந்தோம் என்று சொன்னால் சரிதான். என் அப்பா இருந்த பகுதியில் என் அப்பாவுடன் வாதி வாழ்ந்துவந்தார் என்று சொன்னால் சரியல்ல. வாதியின் ஆதார் அடையாள அட்டையில் அந்த முகவரியை தான் காட்டியுள்ளார்கள் என்றும் அவர்கள் தவறாக காட்டமாட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. சொத்துக்களின் ஆவணங்கள் அனைத்தும் பாப்பாத்தி வசம் இருந்ததை நாங்கள் பிடுங்கிகொண்டு அவரை துரத்திவிட்டோம் என்று சொன்னால் சரியல்ல. கேட்னை பூட்டி அவரை வீட்டிற்குள் வராமல் செய்துவிட்டோம் என்று

சொன்னால் சரியல்ல. நாங்கள் கேட்டை பூட்டியதால் அது குறித்து வாதி காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. ஆனால் உதவி ஆய்வார் போன் செய்து என்ன தகராறு என்று கேட்டார். நாங்கள் தான் வாரிசுகள் என்று கூறினோம். தனக்கும் உரிமை இருப்பதாக வாதி தெரிவித்தாக அவர் கூறினார். அதோடு அவர்கள் முடித்துவிட்டார்கள். நாங்கள் கேட்டை பூட்டியதால் வாதி காவல் நிலையத்தில் புகார் அளித்து நாங்கள் பயந்துகெண்டு கேட்டை திறந்துவிட்டோம் என்றும் வாதி அவருக்கு சொந்தமான பொருட்களை எடுத்துச்சென்றுள்ளார் என்றும் சொன்னால் சரியல்ல. என் அப்பா உயிருடன் இருந்த சமயத்தில் என் பெயருக்கோ என் தம்பி பெயருக்கோ தனபத்திரம் எதுவும் ஏற்படுத்திகொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். என் அம்மா இறந்த பின்னர் 2005 ற்கு பின்னர் தான் என் அப்பா சொத்துக்களை வாங்கியதாக நான் கூறியுள்ளேன் என்றும் ஆனால் என் அப்பா 2002 முதல் சொத்துக்களை வாங்கிவந்துள்ளார் என்று சொன்னால் அது குறித்து என் அப்பா எங்களுக்கு எதுவும் தெரிவிக்கவில்லை. கூடலூாரில் என் அப்பா LIC ல் ஒரு காப்பீடு செய்திருந்தார் என்று சொன்னால் சரிதான். அந்த பணத்தை பெறும் போது நான், என் தம்பி, வாதியும் ஒன்றாக சென்று தான் தலா ரூ.1,00,000/- பெற்றுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. தனித்தனியாக சென்றோம். மொத்தமாக ரூ.1,50,000/- தான் வந்தது. அதில் எங்களை அழைத்து தனியாக தலா ரூ.50,000/- கொடுத்தார்கள். எங்களுக்கு தெரியாமல் பாப்பாத்தி அவர் பெற்ற வாரிசு சான்றிதழை பயன்படுத்தி ரூ.50,000/-

பெற்றுள்ளார். LIC யின் மேலாளர் இவ்வழக்கின் வாதி தரப்பு 2 வது சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார் என்றும் அவரது சாட்சியத்தில் நாங்கள் மூவரும் ஒன்றாக சென்றதாகவும் பாப்பாத்தி கையில் தான் மொத்த தொகையையும் கொடுத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார் என்று சொன்னால் அது தவறான சங்கதியாகும். நாங்கள் 3 வரும் வாரிசு என்பதால் தான் எங்கள் மூவருக்கும் அந்த பணத்தை கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. முறையாக விசாரணை செய்து தான் எங்கள் மூவர் பெயரிலும் வட்டாட்சியர் வாரிசு சான்றிதழ் வழங்கியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. என் அப்பாவிற்கு நல்ல வருமானம் இருந்தது என்றும் அவர் சுயமாக சம்பாதித்த பணத்தை வைத்து தான் தாவா சொத்துகளை வாங்கியுள்ளார் என்றும் என் அம்மாவின் சொத்துகளையோ நகைகளையோ பயன்படுத்தவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. என் அப்பா சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து வாதியை முறையாக திருமணம் செய்து 10 வருட காலமாக வாதியுடன் வாழ்ந்துவந்துள்ளார் என்றும் வாதி தான் என் அப்பாவை பராமரித்துவந்தார் என்று சொன்னால் சரியல்ல. வாதி பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்வதாக கூறியபோது அவர் வாழ்ந்த வீட்டில் இருந்த பொருட்களை எடுத்து லாரியில் சென்ற போது தான் எனக்கு விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு ஆட்டோவில் செல்லும் போது விபத்து ஏற்பட்டது. வாதி ஓய்வூதியம் பெற நாங்கள் ஆட்சேபனை செய்துள்ளோம் என்று சொன்னால் எனக்கு தெரியாது. வாதி சட்டப்படி என் அப்பாவை

திருமணம் செய்த மனைவி என்றும் அதனால் எங்களை போல் வாதியும் என் அப்பாவின் ஒரு வாரிசு என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் பொய்யாக முறைகேடாக 2 வது வாரிசு சான்றிதழை பெற்றுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. வாதிக்கு வழக்கில் 1/3 பாகம் வழங்கி தீர்ப்பாகி சொத்தினை பிரித்துகொடுக்க சென்ற போது தான் காலதாமதம் ஏற்படுத்த மேல்முறையீடு தாக்கல் செய்தோம் என்று சொன்னால் சரியல்ல. அதனால் பாப்பாத்திக்கு தாவா சொத்துக்களில் 1/3 பாகம் பாத்தியதை உள்ளது என்றும் வழக்கு வாதி கோரியபடி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.